# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

### உதவி அமர்வு நீதிமன்றம், பொள்ளாச்சி

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 234/2023 | அரசு தரப்பு | அ.சா.1 |
| பெயர் | லாலு | தந்தை பெயர் | ஜோசப் |
| வயது | 58 | முகவரி | வால்பாறை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873 of 13th day of October 2025.

**(இன்று விசாரணைக்கு எதிரிகள் ஆஜர்.)**

**முதல் விசாரணை**

நான் வால்பாறையில் வசித்து வருகிறேன். நான் வால்பாறையில் ஸ்டேசனரி கடை வைத்து நடத்தி வருகிறேன். 2018 ஆம் வருடத்தில் தேதி மாதம் நினைவில்லை. காலை 11 மணியளவில் கூட்டமாக ரோட்டில் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது நான் கடையின் ஷட்டரை தூக்கியபோது கல் பட்டு எனது கடையின் கண்ணாடி உடைந்து விட்டது. அந்த கல்லை யார் கடைமீது வீசி எறிந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியவில்லை. நீதிமன்றத்தில் ஆஜரான எதிரிகளை எனக்கு தெரியவில்லை. நான் நடந்த சம்பவலத்தை பொறுத்து போலிசாரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்து தான் அது ஆசா 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காடடப்படும் கல் மற்றும கண்ணாடி சம்பத்தின்போது பயன்படுத்தியதா என்று கேட்டால் ஆமாம், அந்த கல் மற்றும

கண்ணாடியானது முறையே சான்று பொருள் 1 மற்றும 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எனது குடும்பத்துடன் வால்பாறை மெயின் ரோட்டில் உள்ள எனக்கு சொந்தமான வீட்டில் குடியிருந்து வருவதாகவும், அதே விலாசத்தில் சொந்தமாக ஸ்டேசனரி கடை வைத்து நடத்தி வருவதாகவும், 05.04.2018 ம் தேதி காலை 10.30 மணியளவில் நான் எனது கடையை திறந்துகொண்டிருந்ததாகவும் அப்போது DMK கட்சியை சேர்ந்தவர்கள் வால்பாறை காந்தி சிலை அருகில் ஆர்ப்பாட்டம் செய்வதற்காக ஒன்று சேர்ந்ததாகவும் அப்பொழுது அந்த கூட்டத்தில் இருந்த DMK கட்சியை சேர்ந்த சௌந்தரபாண்டி என்பவர் வால்பாறையில் எந்த கடையும் திறக்ககூடாது பாபு ஸ்டோர் கடையை மட்டும் ஏன்டா திறந்தான் அவன் கடையை அடித்து நொறுக்குங்கடா என்று சொன்னதாகவும் அப்போது சவுந்திர பாண்டியுடன் இருந்த எனக்கு ஏற்கனவே நன்றாக தெரிந்த வால்பாறை DMK கட்சியை சேர்ந்த D.S.செந்தில்குமாரும முருகாளி எஸ்டேட்டை சேர்ந்த அருண்குமார் என்பவரும் என் கடைக்கு முன்னாடி கிடந்த கல்லை எடுதது இருவரும் மாறி மாறி கடைக்கண்ணாடியை உடைத்தாகவும் இதை நானும் எனக்கு அருகில் இருந்த ரமேஷ், ஆலன், ஏசுதாஸ் ஆகியோரும் சேர்ந்து ஏன் இப்படி என் கடை

கண்ணாடியை உடைக்கறீங்க என்று சத்தம் போட்டதாகவும் அதற்கு அவுங்க மூன்று பேரும் சேர்ந்து எங்களை எதிர்த்து கேட்கிற அளவுக்கு தைரியம் வந்துடுச்சாடா தாயோலி, உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும் நானும் என்னுடன் இருந்த ரமேஷ், ஆலன், ஏசுதாஷ் ஆகியோரும் சேர்ந்து உயிருக்கு பயந்து தப்பித்து ஓடிவிட்டதாகவும், என் கடையில் பொருத்தியிருந்த கண்ணாடியின் மதிப்பு சுமார் ரூ.70,000/- இருப்பதாகவும் எனவே எங்களை கெட்ட வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் விடுத்து கடையின் கண்ணாடியை உடைத்த செந்தில்குமார், அருண்குமார் ஆகியோரின் மீதும் இச்சம்பவத்தை தூண்டியவரான சௌந்தரபாண்டியன் என்பவர் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு புகார் செய்ததாகவும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் தெரிந்தவர்கள் என்பதால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி